1975 ஏப்ரல் 10]

*638—வினா : திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னனூர்ப்பேட்டைத் துணை வட்டம், கன்னிகைப்பேர் காலனி' நெய்வேலி காலனி, ஆலப்பாக்கம் காலனி ஆகியவற்றில் அரிசன மக்களுக்கு வீட்டுமனைகளை ஆர்சிதம் செய்து வழங்கும் திட்டம் மேன்மேலும் காலதாமதம் ஆவதேன் ?

(இ) இது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :

(அ&இ) கன்னிகைப்பேர்—ஆர்சித நிலங்களில் முன் மதிப்பீட்டுப் பட்டியல் தயார் செய்யும்பொழுது, அவ்வூர் அரிசன மக்கள் ஆர்சித நிலங்களில் குடியேறுவதற்கு மறுத்ததால் அவார்டு நிறைவேற்றுவதில் கால தாமதம் ஏற்பட்டது. தற்பொழுது அரிசனங்கள் விருப்பம் தெரிவித்து உள்ளார்கள். ஆர்சித நிலங்களில் முன் மதிப்பீட்டுப் பட்டியல் மாவட்ட ஆட்சியாளரின் பரிசிலனையில் உள்ளது.

நெய்வேலி—நில ஆர்சிதத்திற்கான பிரிவு 6 விளம்பல் வரைவு அரசு வாலாய ஆணை எண் 106. ச.ந. நாள் 24—1—1974-ல் ஏற்கப்பட்டு 25—1—1974-ல் தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப் பட்டுள்ளது. ஆர்சித நிலங்களின் முன் மதிப்பீட்டுப் பட்டியல் மாவட்ட ஆட்சியாளரின் பரிசிலனையில் உள்ளது.

ஆலப்பாக்கம்—நில ஆர்சிதத்திற்கான பிரிவு 4 (1) முன் மொழிவு அரசு வாலாய ஆணை எண். 1220 ச.ந. நாள் 9—8—1974-ல் ஏற்கப்பட்டு, 9—10—1974-ல் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. பிரிவு 6 விளம்பல் வரைவு மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த மூன்று அரிசன நலக் காலனிகளிலும் வீட்டுமனை வழங்கும் திட்டங்கள் ஏற்கனவே பல மாதங்களாகத் தாமதமாக இருக்கின்றன. 1975-ம் ஆண்டு இறுதிக் குள்ளாகவாவது அவர்களுக்கு பட்டா தருவதற்கு ஆணை பிறப்பிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, ஆட்சியாளரிடமிருந்து அவருடைய வரைவு வந்தபிறகு ஏற்றுக் கொள்ளப்படுவதாக அரசு இருக்கிறது.

*639—வினா—திரு. பு. செ. முத்துச் செல்வன் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி வட்டம், பேரூர் கிராம மக்களுக்கு அரிசன நல இலாகா மூலம் குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பு. செ. முத்துச்செல்வன் : தலைவரவர்களே, பேரூர் கிராமத்தில் வசிக்கும் மக்கள் முழுவதும் அரிசன மக்கள் ஆவார்கள். ஏறத்தாழ அங்கே 2,000 மக்கள் தொகை கொண்ட அந்த அரிசன மக்கள் வசிக்கும் கிராமத்திற்கு இரண்டு மூன்று ஆண்டுக்காலமாகியும் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. விரைவில் அந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் அரிசன நல இலாக்காவின் மூலம் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, அரிசனங்கள் தற்பொழுது உபயோகித்து வரும் பேரூர் அக்ரஹாரம் கிணற்றை மேலும் அகலப்படுத்தியும் ஆழப்படுத்தியும், ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைப்பது என்றும், அந்த நீரை அதற்கு எடுத்துச் சென்று அங்கிருந்து குழாய் மூலம் அரிசனப் பகுதிக்கு எடுத்துச் செல்லலாம் என்றும், அதற்கு தேவைப்படும் மதிப்பீட்டுச் செலவான ரூ. 40,000-இல் வேலை செய்யலாம். என்ற நிலை மாவட்ட ஆட்சியாளரின் கவனத்தில் இருக்கிறது.

திரு. பு. செ. முத்துச் செல்வன் : தலைவரவர்களே, அந்த அரிசன மக்களுக்கு அக்கிரஹாரத்திலுள்ள கிணற்றிலிருந்து செல்வதைவிட பக்கத்திலுள்ள ஹேம்லெட்—பேரூரின் கீழ் கிராமத்தில், பிற்படுத்தப்பட்ட, மக்கள் வசிக்கும் பகுதியிலுள்ள கிணற்றில் அதிகமாகத் தண்ணீர் கிடைக்கும் அளவில் இருக்கிறது. அதில் தண்ணீர் வற்றாமல் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்திலிருந்து தண்ணீர் எடுத்து அரிசன மக்களுக்குக் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, இதைத்தான் முன்பே குறிப்பிட்டேன். 40,000 ரூபாய் மதிப்பீட்டில் அங்கிருந்து ஒரு குழாய் மூலம் தண்ணீர் கொடுக்கலாமா அல்லது 50,000 ரூபாய் மதிப்பீட்டில் அரிசனக் காலனியிலே குடிநீர்த் தொட்டி அமைக்கலாமா என்ற இந்த இரண்டையும் பரிசீலித்து வருகிறார்கள்.

*640 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் தொகுதியில், ஊனமலை அரிசன காலனியில் குடிநீர்த்தேக்கத் தொட்டி அரிசன நல இலாகா மூலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என் இராசாங்கம் : செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் தொகுதி ஊனமலை அரிசன காலனியில் குடிநீர்த்தேக்கத் தொட்டி அரிசன நல இலாகா மூலம் கட்டப்பட்டுள்ளது.